# THE GIFT

Collecting Entanglements Embodied Histories

sam
singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# பரிசு

## சிக்கிக்கொண்டவற்றையும் உருபெற்ற வரலாறுகளையும் சேகரித்தல்

### ஒரு பரிசில் என்ன இருக்கிறது?


சமூக நடவடிக்கை முதல் கலாச்சார நிகழ்ச்சி அல்லது தத்துவக் கருத்து வரை, சாதாரணமான ஒன்றாகத் தோன்றும் பரிசு வழங்குதல் என்பது, உண்மையில் தெளிவற்றதும் முரண்பாடானதும் ஆகும். இதன் விளைவாக, ஈர்ப்பு, எரிச்சல் மற்றும் விவாதத்தின் மூலமாகவும் அது ஆகும். ஒரு பொருளாதாரப் பரிவர்த்தனை போலல்லாமல், வழங்கப்படும் பொருளின் பொருண்மை மதிப்பைவிட பரிசு அதிக மதிப்புடையது. இது கொடுப்பவரின் பரந்த மனப்பான்மையின் ஓர் உருவகமாகும். இது பெரும்பாலும் அதன் பெறுநரை கடமைப்பட்டிருக்கச் செய்கிறது; மேலும், இது எதிர்பாராதவிதமாக ஒரு பாரமான சுமையாகவும் அவருக்கு மாறக்கூடும்.

*பரிசு* எனும் கண்காட்சி, நான்கு அருங்காட்சியகங்களின் தொகுப்புகளுக்கு இடையேயான ஓர் உரையாடலாக உருவாக்கப்படும் *சிக்கிக்கொண்டவற்றையும் உருபெற்ற வரலாறுகளையும் சேகரித்தல்* என்ற ஒரு பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த உரையாடல்கள், கலைப்படைப்புகளைப் பரிமாறிக்கொள்ளும், ஒன்றோடொன்று தொடர்புடைய நான்கு கண்காட்சிகளாக நீட்டிக்கப்படுகின்றன. பெறப்பட்ட பரிசுகள், தோண்டியெடுக்கப்பட்ட அரிய கண்டுபிடிப்புகள் மற்றும் முக்கியமான அர்ப்பணிப்புகள் என, சேகரித்தல் சம்பந்தப்பட்ட வரலாறுகளையும் இந்தச் சேகரிப்புகளின் ஆய்வு வெளிப்படுத்துகிறது. பரிசைப் போலவே, இந்தத் திரட்டப்பட்ட பொருள்களின் மதிப்பானது, இந்தச் சேகரிப்புக்கு ஓர் அந்தஸ்தையும் கௌரவத்தையும் அளித்தாலும், இந்தப் பொக்கிஷங்களைக் கவனித்துக்கொள்ளவேண்டிய பொறுப்பையும் கடமையையும் அது சுமத்துகிறது.

ஆயினும், ஒரு பரிசு, திருப்பிச் செய்ய வேண்டும் எனும் உணர்வினையோ, அல்லது கடன்பட்ட ஓர் உணர்வையோ இன்றியமையாததாக ஆக்காமல் போகலாம். திருப்பிச் செய்ய வேண்டும் எனும் எண்ணம் ஏதுமின்றி, பெறுநர் வெறுமனே பரிசைப் பெற்றுக்கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகாரத்தின் சமச்சீரற்ற நிலை மற்றும் கடமையுணர்வே பரிசுக்கு அதன் அர்த்தத்தை அளிக்கிறது. ஏனென்றால், அது பரிசு மட்டுமல்ல, ஒன்றோடொன்று பிணைத்திருப்பவற்றை இணைக்கும் அதன் செயல்பாடுதான் அதன் சுவட்டை அந்தப் பொருளிலும் நினைவிலும் விட்டுச்செல்கிறது.

ஒரு பரிசு ஒன்றோடொன்று சிக்கவைத்தால் மட்டுமே அது ஒரு பரிசு.

*சிக்கிக்கொண்டவற்றையும் உருபெற்ற வரலாறுகளையும் சேகரித்தல்* என்பது, சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகம், கேலரி நேஷனல் இந்தோனேசியா, மையாம் (MAIIAM) சமகாலக் கலை அருங்காட்சியகம் மற்றும் நேஷனல்கேலரி-ஸ்டேட்லிச் மியூசீன் ஜு பெர்லின் ஆகியவற்றின் சேகரிப்புகளின் ஓர் உரையாடல் ஆகும், இது கோயத்-இன்ஸ்டிட்யூட்டால் முன்னெடுக்கப்படும் ஒன்று. அதன் கண்காட்சிகள் ஜூன் யாப், அன்னா-கேத்தரினா கெபர்ஸ், கிரேஸ் சம்போ மற்றும் கிரித்தியா கவீவாங் ஆகியோரால் நிர்வகிக்கப்படுகின்றன.




① **ஜோசப் பியூஸ்** (பி. 1921, ஜெர்மனி; இ. 1986, ஜெர்மனி)
*எனெர்ஜிஸ்டாப்*
1974
செம்பு மற்றும் கம்பளி
415 × 0.9 செமீ
ஸ்டாட்லிசே முசீன் ஜு பெர்லின், நேஷனல்கேலரியின் சேகரிப்பு, மார்க்ஸ் தொகுப்பு

*எனர்ஜிஸ்டாப்* (ஆற்றல் குச்சி) ஜோசப் பெய்ஸின் புகழ்மிக்க நடைமுறையின் முக்கியமான பொருள்வகை மற்றும் கருத்தியல் அம்சங்களை உருபெற வைக்கிறது. மேலும் கலாச்சாரங்களை வரையறுக்கும் எல்லைகள் மற்றும் அழகியலை மீறி விரிவாக்கப்பட்ட யூரேசியாவைப் பற்றிய அவரது கனவாக அது காணப்படுகிறது. பியூஸைப் பொறுத்தவரை, இரண்டாம் உலகப் போரின்போது அவர் ஜெர்மானிய விமானப்படையில் பணியாற்றும்போது, கிரிமியாவில் 1944-ல் ஏற்பட்ட மரணத்திற்கு நிகரான அனுபவத்திற்குப் பிறகுதான் நாடோடி வாழ்க்கைமுறைகள் நிறைந்த யூரேசியா அவரின் கவனத்திற்கு வந்தது. பியூஸ் இருந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. அப்போது டாட்டர்களால் விபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டதை அவர் நினைவுகூர்ந்தார். அவர்கள் அவரைக் கொழுப்பாலும் கம்பளியாலும் போர்த்திக் கதகதப்பாக வைத்திருந்தார்கள்.

இந்தக் கதை ஓரளவு ஒரு புராணக் கதைபோலக் கருதப்பட்டாலும், அது பியூஸின் அழகியல் நடைமுறையை முற்றிலுமாக மாற்றியது. இது அவரது தனித்துவமான அழகியல் வளர்ச்சிக்குக் கணிசமாகப் பங்களித்தது. மேலும், பல ஆர்வங்களிலும் அண்டவியலிலும் பியூஸ் ஈடுபாடுகொண்டதன் காரணத்தை இது பறைசாற்றுகிறது. காப்புப் பொருளான கம்பளி வெளிப்படுத்தும் குணமாக்கும் ஆற்றல் மற்றும் ஒரு தனிமமான தாமிரத்தின் ஆற்றல் மற்றும் ஆன்மீகத்து அடையாளங்கள் ஆகியவை இதில் அடங்கும். பிந்தையதில், ஆற்றல் என்பது உடல், செயல்திறன் மற்றும் படைப்புச் செயல்களுடன் தொடர்புடையது. 1974-ல் அமெரிக்காவிற்கு அவரது முதல் வருகையின்போது, “மேற்கத்திய மனிதனுக்கான ஆற்றல் திட்டம்” என்ற தலைப்பில் அவர் மேற்கொண்ட விரிவுரைச் சுற்றுப்பயணம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். அதில் அவர் கலைச் சுதந்திரத்தை வெகுவாகப் புகழ்ந்தார். குச்சியின் வடிவத்தைப் பொறுத்தவரை, டாட்டர்களைக் குறிக்கின்ற-அதன் ஆவி வழிபாட்டு அர்த்தங்களைத் தவிர, அதன் செயல்பாடு மேய்ப்பனையும், அதன் வழிகாட்டும் சக்தியோடு அது கொண்டிருக்கும் தொடர்புகளையும் எவ்வாறு அலைந்து திரிபவர்களுக்கு ஒரு துணையாக நிற்கிறது என்பதையும் நினைவுபடுத்துகிறது.

## ② **சல்லே ஜபர்** (பி. 1962, சிங்கப்பூர்)


*நெருப்பிலிருந்து பிறந்தது*

1993
கித்தானில் நெகிழி வண்ணம், பிளெக்ஸி கண்ணாடி, ஒளிவிளக்கு, மரம் மற்றும் ஹண்ட் காகிதம்
மாறுபட்ட அளவுகள்
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

சல்லே ஜபரின் கலைப்படைப்புகள் அடையாளம், பிரதிநிதித்துவம் மற்றும் மதிப்புகள் பற்றிய சிந்தனையை எழுப்புகின்றன. எவ்வாறாயினும், இந்த வலுவான தலைப்புகள் வெளிப்படையான, நுண்ணிய மற்றும் பரிந்துரையல்லாத பொருள்விளங்குதலுக்காக வழங்கப்படுகின்றன.

*நெருப்பிலிருந்து பிறந்தது* எனும் படைப்பில், மூன்று எரிந்த கித்தான்கள் நம்மைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்து வரையப்பட்ட குறியீடுகளை வெளிப்படுத்துகின்றன. ஓர் அம்பு, ஒரு பாலம், ஒரு வாசல், ஒரு மலை, ஒரு மரம் ஆகியவை திசை, தொடர்பு, வரம்புகள் மற்றும் வாழ்க்கையின் கருத்துகளை மேற்கோள் காட்டுகின்றன. இந்தக் குறியீடுகள் ஒரே நேரத்தில் உலகளாவிய வடிவத்திலும், கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கை அமைப்புகள் அனைத்துக்கும் பரிச்சயமானவையாகவும் இருப்பதோடு, ஒருவரின் அன்றாட வாழ்க்கைச் சூழலில் பார்க்கும்போது தனிப்பட்டவையாகவும் விளங்குகின்றன. சல்லேவைப் பொறுத்தவரை, இந்த அடிப்படையான அணுகுமுறை, ஆன்மீகம் மற்றும் ஆழ்ந்த அனுபவத்தோடு உரையாடுகிறது. இங்கே, நெருப்புக் கூறானது, மாற்றத்தின் சக்தியைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொடர்பு, ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீயின் மீளுருவாக்கச் சக்தியை அவர் சந்தித்ததால் உந்தப்பட்டதாகும். இது அழிவுகரமானதாகக் கருதப்பட்டாலும், குறிப்பாக யூகலிப்டஸ் மரங்களைப் பொறுத்தவகையில் அது அவசியமான ஒன்றாகிறது.

சல்லே ஜபர், எஸ்.சந்திரசேகரன் மற்றும் கோ ஈ சூ ஆகியோரால் சிங்கப்பூரின் கோதே-கல்விக் கழகத்தில் படைக்கப்பட்ட 1988-ஆம் ஆண்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த *திரிமூர்த்தி* எனும் கூட்டுப்படைப்பின் மையமாக இத்தகைய உருமாற்றம் இருந்தது. *திரிமூர்த்தி*க்குள், படைத்தல், அழித்தல் மற்றும் காத்தல் ஆகிய ஒன்றுக்கொன்று சார்புடைய சுழற்சிகளைப் பிரதிபலிக்கும் ஆற்றல்மிக்க ஒன்றை உருவாக்க, அவர்கள் தங்களுக்குள் ஒருவரிடமிருந்து ஒருவர் உந்துதலைப் பெற்றிருந்தாலும், அவர்களின் வெவ்வேறு நடைமுறைகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இருந்தன.




## ① அஹ்மத் சதாலி

(பி. 1924, இந்தோனேசியா; இ. 1987, இந்தோனேசியா)

*குனுங்கன் இமாஸ் (தங்க மலை)*

1980
எண்ணெய், மரம் மற்றும் கித்தான்
80 × 80 செ.மீ.
இந்தோனேசியாவின் தேசியக் கலைக் காட்சிக் கூடத்தின் தொகுப்பு

*குனுங்கன் இமாஸ்* எனும் படைப்பு, நிலப்பரப்பு, கலாச்சாரம் மற்றும் கலைகளில் மலையின் வடிவம் மற்றும் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. “குனுங்” என்பதை “மலை” என்று மொழிபெயர்க்கலாம். ஒரு புவியியல் அமைப்பான இது, உயரமான ஒன்று என்னும் விளக்கத்தைத் தாண்டி, சக்தி, தெய்வீகச் சக்திகள் மற்றும் ஆன்மீகத் தொடர்புகள் ஆக்கியவற்றைக் குறிக்கும் வகையில் விரிவடையக்கூடும். மேரு மலை இந்த விரிவடையும் விளக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்து மற்றும் புத்த அண்டவியலில், புனிதமானதாகவும் பிரபஞ்சத்தின் மையமாகவும் இது கருதப்படுகிறது. ஜாவாவுக்கு நெருக்கமாக உள்ள மெராபி மலையிலுள்ள துடிப்பான எரிமலை அருகில் உள்ளவர்களுக்கு ஆபத்தை அளிக்கிறபோதிலும்கூட அது மிகவும் மதிக்கப்படுகிறது.

சாதாரணமாக ஒரு முக்கோணமாக அடையாளப்படுத்தப்பட்ட, அஹ்மத் சதாலியின் ஓவியத்தில் உள்ள மலை, ஒரு முழுமையான பிரமிடு வடிவத்தை எடுத்துக்கொண்டு, அதன் உச்சியானது தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டதை பார்வையாளருக்கு வெளிப்படுத்துகிறது. இந்தோனேசியக் கலை அறிஞர்களால், சதாலி பெரும்பாலும் “சுருக்க ஓவியத்தின் தந்தை” என்று கருதப்படும் வேளையில், *குனுங்கன் இமாஸின்* கடினமான மற்றும் சிக்கலான பொருள் அமைப்பு, மலையின் குணங்களை உலகளாவிய மற்றும் ஆன்மீகத்தின் சிந்தனையாக விரிவுபடுத்துவதை அறிவுறுத்துகிறது. தங்க இலையின் துல்லியமான பயன்பாடுகூட வெறுமனே மதிப்பைக் கூட்ட அல்லாமல், தனிமத்தின் நீடித்த தரத்தையும் கூறுகிறது. பொருள், வடிவம் மற்றும் குறியீட்டின் இந்த அழகியல் இணைவு, உலகில் ஆழமாக வேரூன்றிய ஓர் ஏற்றத்தை உணர்த்துகிறது.

## ② சல்லே ஜபர் (பி. 1962, சிங்கப்பூர்)

*குனுங்கன் II*

1989–1990
ஓவியம் மற்றும் கலப்பு ஊடகம்
107 × 102 செ.மீ.
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

சல்லே ஜபர் *குனுங்கன் II*-ல் குறியீட்டுச் சொற்களஞ்சியத்தை ஆராய்வதைத் தொடர்கிறார். ஆன்மீகம் மற்றும் ஆழ்நிலை உட்பட நம்மைச் சுற்றியுள்ள உலகில் எதிர்கொள்ளும் வடிவங்களையும், வடிவங்களின் தொடர்புகளையும் வெளிக்கொண்டு வருகிறார். இந்தக் காலகட்டத்தைச் சார்ந்த அவரது படைப்புகள், ஆஸ்திரேலியாவின் வெளிப்பரப்பு மற்றும் இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மியான்மர் முழுவதும் உள்ள வரலாற்றுக் கலாச்சாரத் தளங்கள் மற்றும் அவற்றின் கலாச்சார மற்றும் அடையாளத் தொடர்புகள் பற்றிய பிரதிபலிப்புகளால் உந்தப்பட்டவை. சோய் வெங் யாங்கால் நிர்வகிக்கப்பட்ட, *5 திசைகள்: ஐந்து இளம் சிங்கப்பூர் கலைஞர்களின் சமீபத்திய கலைப்படைப்புகள்* எனும் 1994-ஆம் ஆண்டுக் கண்காட்சியில், “என் படைப்பில் குறியீடுகள் உள்ளன. குறியீடுகள் என்பன, பொருட்களின் இயல்புக்குள் இருக்கும் எதார்த்தங்கள் ஆகும். குறியீடுகள் மூலம் தான் ஒருவர் எழுப்பப்ப்படுகிறார்; குறியீடுகள் மூலமே ஒருவர் மாற்றப்படுகிறார்; மேலும் குறியீடுகள் மூலமே ஒருவர் தன்னை வெளிப்படுத்துகிறார்,” என்று சல்லே கூறினார்.

சல்லே *குனுங்கன் II*-ல் இத்தகைய குறியீடுகளுக்கு இடையில், ஒரு புதிய உள்ளமைவுக்கு வழிவகுக்கும் இணக்கமான ஒரு சமநிலையைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். இதன் விளைவு, ஆற்றலுடன் ஒத்திசையும் ஒரு முறையான கலவையாகும். குறியீடுகளுக்கிடையேயான பதற்றங்கள் மற்றும் இணைப்புகளால் உருவாக்கப்படும் துடிப்பு, ஊசல் போன்ற கூறுகளில் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றின் நோக்குநிலை, வர்ணம் பூசப்பட்ட மேற்பரப்பை விட ஈர்ப்பு விசையால் இயக்கப்படுகிறது. இந்தப் படைப்பில் உள்ள, நெருப்பிலிருந்து வரும் சாம்பல், ஓர் இரத்தத்தின் வண்ணத்திலான சரம் மற்றும் கலைஞரின் கையைக் குறிக்கும் அடையாளங்கள் போன்ற, பொருள் மற்றும் வண்ணத்தின் மூலம் உயிரூட்டம் அதிகரிக்கப்படுகிறது.


③ **கோரகிரித் அருணானோன்சாய்** (பி. 1986, தாய்லாந்து)
*வரலாற்றோடு கூடிய ஓவியம்: தாய்லாந்தின் திறமை 2012*
*துவாங்ஜாய் ஜான்சானோய் இப்போது எங்கே இருக்கிறார் என்று நான் வியக்கிறேன்?*
2018
தங்கப் படலம், கித்தானில் மைத்தெளிப்புப்பொறி அச்சு, அரைத்திண்மக் கரைசல், வெளுத்த பருத்தித் துணி மற்றும் நீட்டுசட்டகம்
218.4 × 162.6 × 3.8 செ.மீ.
MAIIAM சமகாலக் கலைஅருங்காட்சியகத்தின் தொகுப்பு

④ *வரலாற்றுடன் கூடிய ஓவியம்: மேற்கத்திய விளக்கத்தில் உலகளாவிய “நான்” என்பதை எரிப்பது இந்த ஓவியத்தைப் பார்க்கும் ஒரு வழியாகும்*
2018
கித்தானில் மைத்தெளிப்புப்பொறி அச்சு, அரைத்திண்மக் கரைசல், வெளுத்த பருத்தித் துணி மற்றும் நீட்டுசட்டகம்
218.4 × 162.6 × 3.8 செ.மீ.
MAIIAM சமகாலக் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

தனது “வரலாறு” மற்றும் “ஓவியம்” ஆகியவற்றின் மறுகலப்பைக்கொண்டு, கோரகிரித் அருணானோஞ்சாய் வரலாற்று ஓவிய வகைக்குச் சவால் விடுகிறார். அவை பொதுவாக, காட்சிகளின் பிரதிநிதித்துவச் சித்தரிப்புகள் அல்லது நிகழ்வுகளின் விவரிப்புகளாக, செயற்கையான நோக்கம் கொண்டவைகளாக விளங்குகின்றன. 2013-ல் தொடங்கப்பட்ட, *வேடிக்கையான பெயர்களைக் கொண்ட நபர்களால் நிரப்பப்பட்ட அறையில் வரலாற்றோடு கூடிய ஓவியம் வரைதல்* எனும் தொடர், அமிலத்தால் கழுவப்பட்டப் பருத்தித்துணியில் வரையும் ஓவியங்கள் முதல், போலிப்பொம்மைகள், கலைஞர்கள், பருத்தித்துணித் தலையணைகள் மற்றும் எப்போதாவது ஒளிக்கதிர்கள் பொன்றவை இடம்பெறும் காணொளி நிறுவல்கள் வரை பல வடிவங்களில் வெளிப்படுகிறது. இருப்பினும் இவை அனைத்தும் சில முக்கியமான கருப்பொருள்களிலேயே வேரூன்றியுள்ளன.

இந்தத் தலைப்புக்குள், மேற்கத்தியக் கலை வரலாற்று நியதியையும் தாய்லாந்தில் இருந்து வந்த ஒரு சமகாலக் கலைஞரின்மீது இந்த வரலாறு சுமத்தும் சுமையையும் பற்றிய ஒரு சொற்றொடர் உள்ளது. கோரகிரித்தின் பருத்தித்துணிப் பயன்பாட்டை, *தாய்லாந்தின் திறமை* என்ற போட்டி நிகழ்ச்சியில், கோ-கோ-நடனக் கலைஞரான துவாங்ஜாய் ஜான்சோனாய் 2012-ல் சர்ச்சைக்குரிய தொலைக்காட்சி அத்தியமான “உடல் ஓவியத்தில்” பயன்படுத்தியத்தைக் காணலாம். துவாங்ஜாயின் நிகழ்ச்சி அழகியல் பற்றிய ஒரு பொது விவாதத்தைத் தூண்டியது. அவர் தனது வெற்று உடலில் வரைந்ததால், அந்த நிர்வாணத்திற்கு எதிரான எழுச்சியால் இது மேலும் அதிகரிக்கப்பட்டது. கோரகிருத்தின் ஓவியங்களில், பருத்தித்துணி பிரபலமான நுகர்வோர் கலாச்சாரத்தின் தொடர்புகளை எடுத்துக்காட்டுகிறது. அதன் உயர்வு தாழ்வு எனும் இருமை பற்றிய விமர்சனத்தை நிகழ்த்துவதோடு, அழகியல் உருவாக்கத்திற்கான அதன் சொந்தக் கட்டமைப்பையும் அது நிறுவுகிறது.

இந்த ஓவியங்களை உருவாக்கும் செயல்முறையில், கித்தான்களை எரிப்பது அடங்கும். இதை கோரகிரித் புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டு, பின்னர் இந்தப் புகைப்படங்கள கருகிய பகுதிகளுக்கு பதிலாகப் பயன்படுத்தினார். இந்த வழியில், வரலாற்றுக் காலம், மறுபிறப்பு, அறிவொளி, சுயம் மற்றும் ஆன்மா ஆகிய கருப்பொருள்களில் அவரது ஆய்வுக்கு ஒரு தொடக்க புள்ளியாக செயல்படும் அவற்றின் மாற்றத்தின் தருணத்தை அவர் பதிவு செய்தார்.




## ① **டோலோரோசா சினாகா** (பி. 1952, இந்தோனேசியா)

*ஒற்றுமை*
2000
வெண்கலம், கண்ணாடியிழையில் மறுவடிவமைப்பு
110 × 43 × 83 செ.மீ.
திறந்த பதிப்பு
ஓவியக் கலைஞரின் தொகுப்பு
இந்தோனேசியாவின் கோதே அமைப்பு மூலம் உருவாக்கப்பட்டது

*ஒற்றுமை* படைப்பானது, பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் கொடூரமாகத் தாக்கி, இந்தோனேசியாவில் மே 1998-ல் நடந்த கலவரத்திற்கு எதிரான ஒற்றுமை மற்றும் எதிர்ப்பின் சக்திவாய்ந்த உருவகமாகும். இந்தச் சிற்பம், ஏழு பெண் உருவங்கள் தோளோடு தோள் நின்று, கைகள் ஒன்றோடொன்று பிணைந்திருக்க, காற்றில் ஒரு கையை மடக்கி உயர்த்திப் பிடித்திருப்பதைக் காட்சிப்படுத்துகிறது. உருவங்களின் தோரணைகள் மற்றும் வெளிப்பாடுகள், அதிர்ச்சியால் வடிவமைக்கப்பட்ட அவர்களின் உளவியல் உட்புறத்தை வெளிப்படுத்துகின்றன: வாய்கள் வேதனையால் பிளந்திருக்க, அவர்களின் முகங்கள் வானத்தை நோக்கி உயர்ந்துள்ளன, ஒன்றோடொன்று இறுக்கமாக அழுத்தியிருக்கும் உடல்கள், ஓர் அசைக்க முடியாத ஒற்றுமைச் சுவரைப்போல வியத்தகு முறையில் நெருக்கத்தில் உள்ளன.

“உடலின் இலக்கணம்” பற்றிய இத்கைய ஆய்வுகள், அதன் நிலைகள் பற்றிய ஆய்வு மற்றும் சிற்ப வெளிப்பாடுகளின் எடுத்துரைப்பதற்கான செயல்பாடு ஆகியவை டோலோரோசா சினாகாவின் நடைமுறையில் முக்கியமானவையாகத் திகழ்கின்றன. உயிருடன் இருப்பதற்கான நிகழ்வை அனுபவிக்கும் நேரடி மற்றும் புலன்சார்ந்த முறைகளைச் சமிக்ஞை செய்யும் மற்றும் உருவகப்படுத்தும் ஒரு வழியாக, அவருடைய படைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கும் பெண்ணின் உருவத்தை நோக்கி ஈர்க்கப்படுகின்றன.

அரசியல் செயல்பாட்டில் சினாகாவின் தீவிர ஈடுபாட்டின் பின்னணியில் இதைக் கவனித்தால், இந்தோனேசியாவில் மனித உரிமைகள் முதல் ஜனநாயகத்திற்கான போராட்டம் வரையிலான முக்கியமான பிரச்சினைகளை எதிர்கொள்ளப் பயன்படுத்தப்படும் அன்றாட மனிதநேயம் மற்றும் இலட்சியவாதத்திற்கு இந்தப் படைப்பு சிறப்பாக மரியாதை செலுத்துகிறது.

## ② **அம்பன்னி சத்தோ** (பி. 1983, தாய்லாந்து)

*ஒளி* (24:31)
2013
8 புகைப்படங்களின் தொகுப்பு, காகிதத்தில் நிறமி அச்சு
180 × 120 செ.மீ. (ஒவ்வொன்றும்)
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

*ஒளி (24:31)* என்னும் படைப்பில், உடல் என்பது அடையாள விளைவுகள் மற்றும் பல பரஸ்பர இணக்கங்களின் சிக்கலான சுழற்சிக்கான ஒரு தளமாகக் கருதப்படுகிறது. எட்டு நிஜ அளவிலான உருவப்படங்கள் கருப்புத் துணிப் பர்காவை அணிந்திருக்கும் உருவங்களைக் கொண்டுள்ளன. முதல் பார்வையில் அவை முக்காடிடும் நடைமுறைகளின் வழக்கமான பிரதிநிதித்துவங்களாகத் தோன்றுகின்றன. இருப்பினும், நெருக்கமாகப் பார்த்தால், துணியின் இருளால் கட்டமைக்கப்பட்ட அவர்களின் உடலின் பாகங்களைக் கவனிக்கலாம்.


அம்பன்னி சத்தோவைப் பொறுத்தவரை, விலைமதிப்பற்றதாகக் கருதப்பட்டு, அதனால் பாதுகாக்கப்பட்ட உடலும்கூட ஒரு தனிப்பட்ட அடையாளம் மற்றும் தன்னாட்சிக்கு ஆதாரமாக உள்ளது. அவரது உருவப்படங்கள் உடலின் வெளிப்பாட்டினை விளக்குவதில் உள்ள சிக்கல்களை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், சத்தோவின் பின்புலமான, முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் தாய்லாந்தின் பட்டானி மாகாணத்தின், தாக்கம் அவரிடம் காணப்பட்டது. அங்குக் கலாச்சார அடையாளம், தேசிய அரசு மற்றும் வாழ்க்கையில் நம்பிக்கை ஆகியவற்றின் விளைவுகள் தீவிரமாக உணரப்படுகின்றன. *ஒளி (24:31)* படைப்பில், முக்காடிடும் நடைமுறைகளுக்கான வெவ்வேறுபட்ட அர்த்தங்களைக் கருத்தில் கொள்கிறது. மேலும், இந்த நடைமுறை பற்றிய சத்தோவின் சொந்தக் கண்ணோட்டத்தையும் இது வெளிப்படுத்துகிறது.

③ **டோனா ஓங்** (பி. 1978, சிங்கப்பூர்)
*பராமரிப்பாளர்*
2008
பல்லூடக நிறுவல்
8 × 5 × 2.7 மீ.
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

இந்தப் படைப்பில், டோனா ஓங் ஒரு கற்பனையான அமைப்பை உருவாக்குகிறார். இது, அமெரிக்க மத போதகரான ரெவரெண்ட் சிட்னி குலிக் அவர்களால் தொடங்கப்பட்ட *நட்புப் பொம்மைத் திட்டத்தின்* வரலாற்றை விரிவுபடுத்துகிறது.

1924-ஆம் ஆண்டில், அமெரிக்கக் காங்கிரஸால் நிறைவேற்றப்பட்ட குடிநுழைவுச் சட்டத்தால் தூண்டப்பட்ட ரெவரெண்டின் திட்டம், 1927-ல் நல்லெண்ணத்திற்கான சமிக்ஞையாக, அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்ட, மிகவும் கொண்டாடப்பட்ட நீலக்கண் பொம்மைகளின் பரிசிலிருந்து தொடங்கியது. ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட கிமோனோ உடையணிந்த பொம்மைகளை அமெரிக்காவுக்கு அனுப்பியதன் மூலமாக, ஜப்பானும் அந்த மரியாதையைத் திருப்பிச் செலுத்தியது. துரதிருஷ்டவசமாக, பேர்ள் துறைமுகக் குண்டுவெடிப்பு மற்றும் அதற்கு அடுத்த இரண்டாம் உலகப் போர் ஆகியன அந்த நாடுகளுக்கிடையேயான உறவை மோசமாக்கின. மேலும், இந்தப் பொம்மைகள், அந்தந்த நாடுகளின் தூதர்களாகவும் பிரதிநிதிகளாகவும் பார்க்கப்பட்டதால், அதிகரித்து வந்த பகைமையின் சுமையை அவை தாங்கின. பல பொம்மைகள் அழிக்கப்பட்டன, அருங்காட்சியகச் சேகரிப்புகளிலிருந்து அகற்றப்பட்டன அல்லது பார்வையிலிருந்து அகற்றப்பட்டன.

இந்த வரலாற்று நிகழவிற்கு ஓங் திரும்பியதில், பொம்மைகளின் நினைவைப் பார்த்துக்கொண்டிருப்பதாகத் தோன்றும் ஒரு பராமரிப்பாளர் தோன்றுகிறார். இந்தக் காட்சியில் பதிக்கப்பட்ட காணொளிகள், நேரமானது உதித்து மறையும் ஒளி வெளிச்சத்தில் அவற்றின் இருப்பைச் சாட்சியாக்கிக் கடந்து செல்வதைக் காட்டுகின்றன. மற்றும், இறுதியாக அந்தப் பொம்மைகள் நட்போடு சந்தித்துக் கொண்டதைக் காட்டுகின்றன.




## ① **ஹோலி ஸாஸ்னர்** (பி. 1951, அமெரிக்கா)

*இரண்டாம் மூச்சு*

2005
சூப்பர் 16 மி.மீ. படம், மின்னிலக்கமயமாக்கப்பட்டது, வண்ணம் மற்றும் ஒலி (இருமூலச் சூழொலி), 10:16 நிமிடம்
ஸ்டாட்லிச் முசீன் சூ பெர்லின், நேஷனல்கேலரியின் திரட்டு
2005 ஃப்ரூண்டே டெர் நேஷனல்கேலரியால் வாங்கப்பட்டது

*இரண்டாம் சுவாசம்* எனும் படைப்பு பெர்லினின் நீண்ட மற்றும் கட்டுக்கடங்காத வரலாற்றின் விளக்கத்தை ஹோலி சௌஸ்னரின் நாடகத்தின் மூலம் வழங்குகிறது. 1990-களில் அந்த நகரத்தில் வாழ்ந்து பணிபுரிந்தபோது ஈர்க்கப்பட்டு, ரப்பர் சிலிக்கான் மற்றும் பின்னப்பட்ட பொருட்களைக்கொண்டு மூன்று பெரிய உருவங்களை ஒரு தொடராக சௌவுஸ்னர் உருவாக்கினார். போட்ஸ்டேமர் பிளாட்ஸ், நியூ நேஷனல்கேலரி, ஸ்ப்ரீ ஆறு மற்றும் இப்போது இடிக்கப்பட்ட பாலஸ்ட் டெர் ரிபப்ளிக் போன்ற நகரத்தின் முக்கிய அடையாளங்களில் படமாக்கப்பட்ட காட்சிகளில் சௌவுஸ்னர் இந்த உருவங்களுடன் ஊடாடுவதை இந்தப் படத்தில் காணலாம். ஒவ்வொரு காட்சியிலும், உருவங்களின் எடையானது அவரது அசைவுகளுக்கு இணங்க எதிரொலிப்பதை நாம் காண்கிறோம். கருத்தியலிலிருந்து நிஜமாக மாறும் வரலாற்றின் உருவகமே உடல் என்பதை இது உணர்த்துகிறது.

சௌஸ்னர் இந்த உருவங்களுடன் ஊடாடுவது, அவரது உடலின் ஈர்ப்பு விசையின் மூலம், பல்வேறு சூழல்களுக்கு வடிவம் கொடுக்கிறது. நகரத்தை ஒரு மேடையாகக் கருதியதில், சௌஸ்னர் இடத்தையும் அதனுள் உள்ள பொருள்கள் மற்றும் உடல்களையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். அவரது நடன அமைப்பு, மாறுபட்ட மற்றும் நேரியல் அல்லாத காட்சிகளையும் சூழல்களையும் வழங்குகிறது. அவை, பரிச்சயமான தளங்களின் வழக்கமான ஒருங்கிணைப்புகளைத் தலைகீழாக மாற்றுகின்றன. அவற்றின் அன்றாடச் செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து புதிய அகநிலைகளை வழங்குகின்றன.

## ② **புரூஸ் நௌமன்** (பி. 1941, அமெரிக்கா)


*உடல் அழுத்தம்*

1974
சுவர், வாசகம் மற்றும் சுவரொட்டி
மாறுபட்ட அளவுகள்
ஃப்ரெட்ரிக் கிறிஸ்டியன் ஃப்ளிக் தொகுப்பு இம் ஹாம்பர்கர் பான்ஹோஃப், பெர்லின்

ப்ரூஸ் நவ்மானின் உடல் கூறு சார்ந்த படைப்புகளில், சாதாரணமாகத் தோன்றும் அசைவுகளால் நம் கவனத்தை ஈர்க்கும் உடல் ஒரு சக்திவாய்ந்த சாதனம். இதற்கு ஒரு பரிச்சியமான உதாரணம், அவரது ஆரம்பகாலத் தனிக் காணொளியான ஒரு *சதுரத்தின் சுற்றளவைச் சுற்றி மிகைப்படுத்தப்பட்ட முறையில் நடந்து கொள்வது* (1967-8). இந்தப் பயிற்சியை நௌமன் மீண்டும் மீண்டும் செய்வது, இடத்தைக் குறிப்பது மட்டுமல்லாமல், உடலின் வரம்புகளையும் குறிக்கிறது. நௌமனைப் பொறுத்தவரை, அலங்கரிக்கப்படாத உடல்கூட, ஆராய்வதற்கான சாத்தியக்கூறுகளால் நிறைந்துள்ளது.

*உடல் அழுத்தம்* நௌமானின் கருத்தியல் மற்றும் செயல்திறன் அணுகுமுறைகளை ஒருங்கிணைக்கிறது. அவரது பல படைப்புகளைப் போலல்லாமல், நௌமானை விட பார்வையாளர்களே இங்கு இதைச் செயலாக்குபவர்கள். *உடல் அழுத்தம்* ஓர் அறிவுறுத்தல் தொகுப்பைக் கொண்டுள்ளது. இது தங்கள் உடலை ஒரு சுவரின் விட்டுக்கொடுக்காத மேற்பரப்பில் அறிமுகப்படுத்தி, அதன் எதிர்ப்பை எதிர்கொள்ளவும் அதனை உணர்ந்து கொள்ளவும், பார்வையாளர்களை அழைக்கிறது. இது, சுவரின் மறுபுறத்திலிருந்து சுயமானது திருப்பித் தள்ளுவதைப் பற்றிய பரிசோதனைக்கு வழிவகுக்கிறது. அத்துடன், அதன் வடிவம், தசை உளைச்சல் மற்றும் உணர்வுகள் போன்ற அவர்களின் உடலைப்பற்றிய ஆய்வுக்கும் வழிவகுக்கிறது. படைப்பானது உடல்சார்ந்த பயிற்சியிலிருந்து மனம்சார்ந்த பயிற்சியாக மாறும்போது, சுவர் திடீரென மறைந்துவிடுவதைப்போலத் தோன்றுகிறது. மேலும், எஞ்சியிருப்பது உடல் மட்டும்தான்; ஒரே நேரத்தில், நன்கு பழக்கமானதாகவும் ஆனால் புதிதாக அனுபவிக்கப்படுவதாகவும் உள்ள ஒன்று.

பீடத்தின் அடுக்கிலிருந்து ஒரு கலைப்படைப்புச் சுவரொட்டியைத் தயவுசெய்து எடுத்துக்கொள்ளுங்கள்.




① **டாங் டா வு** (பி. 1943, சிங்கப்பூர்)
*சியூப் நகாசத்தீனுக்கான நினைவுச்சின்னம்*
1991
மரம் மற்றும் பூச்சு
மாறுபட்ட அளவுகள்
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

டாங் டா வு சிங்கப்பூரில் சமகாலக் கலையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நபராக உள்ளார். அவரின் முக்கியமான நிறுவல், சிற்பம் மற்றும் நிகழ்த்துகலை சார்ந்த படைப்புகளுக்காகப் பெயர்பெற்று விளங்குகிறார். *சியூப் நகாசாதீனுக்கான நினைவுச்சின்னம்* சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பிரச்சினைகளில் டாங்கின் ஆய்வுகளைத் தொடர்கிறது. இது தாய்லாந்துச் சுற்றுச்சூழல் பாதுகாவலர், சியூப் நகாசாத்தீனின் நினைவாகச் செய்யப்பட்டது. எனவே, அரசு தயாரித்த நினைவுச்சின்னத்துடன் ஒப்பிடுகையில், இது வேண்டுமென்றே அதிகமான பச்சாதாப உணர்வை எழுப்பும் வகையிலும், பாரம்பரியத்தைக் குறைவாகக் கையாண்டும் செய்யப்பட்ட ஒரு நினைவுச்சின்னமாகும்.

நகாசாத்தீன் ஒரு தீவிரமான மற்றும் ஆர்வமுள்ள செயற்பாட்டாளர் மற்றும் அறிஞர் ஆவார். அவர் சியோ லான் ஏரி, துங்யாய் நரேசுவான் வனவிலங்குச் சரணாலயம் மற்றும் ஹுவாய் கா காங் வனவிலங்குச் சரணாலயம் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக அயராது பிரச்சாரம் செய்தார். நகாசாத்தீன், தொடர்ச்சியான சவால்களுடன், இறுதியில் வெல்ல முடியாததாக உணர்ந்த, ஓர் எழுச்சிப் போரை எதிர்கொண்டார். நகாசாத்தீன் 40 வயதில் தனது உயிரை மாய்த்துக் கொண்டார். இந்த மாபெரும் நிகழ்வானது, செப் நகாசதீன் அறக்கட்டளையை நிறுவுவது உட்பட்ட பல நடவடிக்கைகளை எடுக்க ஊக்குவித்தது. நகாசாத்தீனின் போற்றத்தக்க பாதுகாப்புப் பணி, ஒரு தலைமுறை இளம் வன ரோந்து அதிகாரிகளுக்கு ஊக்கமளித்தது. இந்த ஒரு நிரந்தரமான புகழ், அவர் கனவிலும் நினைத்துப் பார்க்காததாகும்.

டாங்கின் நினைவுச்சின்னம் நகாசாத்தீனின் துணிச்சலையும் துணிச்சலான முயற்சியையும், ஓர் எளிமையான படகு நீரோட்டத்தை எதிர்த்துச் செல்வதைக் காட்டுவதன் மூலம், நினைவுகூர்கிறது. இந்த உருவப்படம் தற்செயலாக ஒரு தாய் மரபுத்தொடரைக் ("เข็นครกขึ้นภูเขา") குறிப்பிடுகிறது. இதன் மொழிபெயர்ப்பு, ஓர் அரவைக் கல்லை ஒரு மலையின் மேல் தள்ளுவதைக் குறிக்கிறது. இது ஒரு கடினமான அல்லது சாத்தியமற்ற பணியைக் குறிக்கிறது.

② **கேப்ரியல் பாரெடோ** (பி. 1957, பிலிப்பைன்ஸ்; இ. 2020, பிலிப்பைன்ஸ்)
*ஒன்று*
1999
கலப்பு ஊடகம்
69.5 × 57.7 × 17.4 செ.மீ.
சிங்கப்பூர்க் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

கேப்ரியல் பாரெடோவின் திரள்கள் ஒரே நேரத்தில் விசித்திரமானவையும் அத்தோடு அற்புதமானவையும் ஆகும். சிக்கலான பல்வேறு வகைப்பட்ட கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் மற்றும் தற்போதுள்ள பொருள்களைப் பயன்படுத்தி சாமர்த்தியமாகப் படைக்கப்பட்டுள்ளது. ஓர் இருப்பின் உணர்வும் உயிர்வாழும் உணர்வும், எங்கும் நிலவியும் பரவியும், பார்வையாளரை பாரெடோவின் சிக்கலான உலகங்களுக்குள் ஈர்க்கிறது. ஒரு முன்னோடி இயக்க ஓவியக் கலைஞராகப் பின்னாளில் புகழ்பெற்ற பர்ரெடோவின் பிற்காலப் படைப்புகளின் இயக்கவோட்டத்தை ஒன்று கொண்டிருக்கவில்லை. என்றாலும், அதன் இயந்திரத்தனமான நுணுக்கமும் துல்லியமும் ஒரு கைக்கடிகாரம் செய்பவரின் கைத்திறனை நினைவுபடுத்துகிறது.

ஒரு ஸ்பானிஷ் பிரபுவின் அலங்கரிக்கப்பட்ட ஒரு சாண்டோ சிலையை வெளிக்கொணர, ஓர் அமைதியான புத்தரின் தலை திறக்கப்பட்டுக் காட்சியளிக்கிறது. அவர்களின் முகங்கள் மாறுபட்டதாகத் தோன்றினாலும், விநோதமாக அவை ஒன்றுக்கொன்று இணக்கமாகவும் உள்ளன. அவை உண்மையில் சிறகுகள் கொண்ட உடற்பகுதி ஒன்றைப் பகிர்ந்துகொள்கின்றன. இது சிலுவைகள், கடவுள்கள், தெய்வங்கள், புனிதர்கள் மற்றும் மடத்துறவிகள் ஆகியவற்றாலான, தீவிரமான மர்மமும் புனிதமும் கலந்த ஒரு விசித்திரமான கலவையை வெளிப்படுத்துகிறது.

*பரிசின்* பின்னணியில், மனித நிலை, அதன் இருமைகள் மற்றும் போராட்டங்களை விசாரிப்பது போலவே, கற்பனை மற்றும் சாத்தியக்கூறுகளின் பயணங்களைக்கொண்டும் *ஒன்று* பார்க்கப்படலாம்.

## ③ **அந்தோணி லாவ்** (பி. 1933, மலேசியா; இ. 2016, மலேசியா)

*விண்வெளி முட்டைகள்*

1970
அலுமினியம்
23 × 52 × 25 செ.மீ. (ஒவ்வொன்றும்)
சிங்கப்பூர்த் தேசியக் கலைக் காட்சிக் கூடத்தின் தொகுப்பு

அந்தோணி லாவின் படைப்புகளில், துல்லியமான பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம், கருத்து மற்றும் கருப்பொருளுக்கு அவர் உயிர்கொடுத்தார். வால் கொண்ட இந்த வடிவங்கள் வால்நட்சித்திரங்களை நினைவுபடுத்துகின்றன; அவற்றின் மேற்பரப்புகள் வேண்டுமென்றே மெருகூட்டப்படாமல் பொலிவு செய்யப்பட்டுள்ளன. அவை இயங்கிக்கொண்டுள்ளன அல்லது இயங்கிக்கொண்டு இருந்தன என்ற தோற்றத்தை இது உருவாக்குகிறது. விண்வெளிசார்ந்த பனிப்போர்ப் பந்தயத்தில், நிலாவில் கால் வைத்தது ஒரு சாதனை என்றாலும், லாவின் *விண்வெளி முட்டைகள்* வேறு ஒரு பரிமாணத்தில் செல்கின்றன. மனிதர்களின் வின்வெளி ஆய்வு மற்றும் புதிய எல்லைகளைத் தொடுவது ஆகியவை ஏற்படுத்தியிருந்த உற்சாகம் மற்றும் சாத்தியக்கூறுகளில் சிக்கியிருந்தாலும் கூட, அது, அரசியல் அல்லது தேசியத்தைவிடவும் அழகியலைச் சார்ந்துள்ளது.

மலேசியாவில் நவீனச் சிற்பக்கலையின் முன்னோடியாகக் கருதப்படும் லாவின், ஒரு மிகச் சிறந்த படைப்பாக *விண்வெளி முட்டைகள்* கருதப்படலாம். *நெருப்பின் மெய்பொருள் / ஜின் அபி* (1959), *விடைச்சேவல் / ஆயாம் ஜன்தன்* (1963) மற்றும் *காடு / ரிம்பா* (1967) போன்ற இயற்கை மற்றும் கூறுகளைக் கருப்பொருள்களாகக் கொண்ட சிற்பங்களுக்காக அவர் பரவலாக அறியப்பட்டார். பதிவுகளின்படி, *விண்வெளி முட்டைகள்* முதன்முதலில் 1970-ஆம் ஆண்டில் பலாய் சேனி லுகிஸ் நெகாராவில் நடந்த 13-வது தேசியக் கலைக் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் இந்தியானாப் பல்கலைக்கழகத்தில் மேலும் படிப்பதற்காக 1968-ல் லாவ் ஃபுல்பிரைட் உதவித்தொகையைப் பெற்றபிறகு, 1969-ஆம் ஆண்டில் அமெரிக்க விண்வெளி வீரர்கள், நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் “பஸ்” ஆல்ட்ரின் ஆகியோர் முதலில் நிலாவில் கால்பதித்ததற்கு அடுத்த ஆண்டில் இது நடைபெற்றது.

## ④ **ஹோ சூ நியன்** (பி. 1976, சிங்கப்பூர்)

*தென்கிழக்கு ஆசியாவின்முக்கிய அகராதி: எஃப் ஃபார் ஃபோல்ட்*

2021
நாணய வடிவமைப்புடன் இணைந்து
ஓவியக் கலைஞரின் புத்தகம்
2021
மூடப்பட்ட நிலை: 13 × 15.5 செ.மீ.
திறந்த நிலை: 42 × 25 செ.மீ.
ஓவியக் கலைஞரின் தொகுப்பு
இந்தோனேசியாவின் கோதே கல்விக்கழகம் மூலம் உருவாக்கப்பட்டது

*எஃப் ஃபார் ஃபோல்ட்*, ஹோ சூ நியனின் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேற்கோள் திட்டமான *தென்கிழக்கு ஆசியாவின் முக்கிய அகராதி* (CDOSEA), 2012-ல் தொடங்கியது. தென்கிழக்கு ஆசியாவைப் பற்றி அறிந்து கொள்வதற்கான மாற்று அணுகுமுறையாக இந்த அகராதி வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் வரலாறுகள், கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்களுக்குப் பதிலளிக்கும் கருத்துகள், கலைக்கூறுகள் மற்றும் சுயசரிதைகளின் அடுக்கடுக்கான கண்ணோட்டத்தை அது முன்வைக்கிறது. ஆங்கில (லத்தீன்) எழுத்துகளின் வரிசைப்படி ஒழுங்கமைக்கப்பட்ட அதன் சொற்களின் தொகுப்பு முதலில் இணையக் கட்டமைப்பாக வெளிடப்பட்டது. திரைப்படம் மற்றும் நாடகப் படைப்புகள், அத்தோடு நிறுவல் உட்பட, இந்தப் படைப்பு வெவ்வேறு வடிவங்களை எடுத்துள்ளது. இங்கே, இது அகராதியின் தரவுத்தளத்திலிருந்து கேட்பொலிக் காட்சியிலிருந்து எடுக்கப்பட்ட படங்களைக்கொண்ட முடிவற்ற நிஜமான புத்தகமாக உருவெடுத்திருக்கிறது. அதன் மடிக்கப்பட்ட பக்கங்கள் தென்கிழக்கு ஆசியாவை உள்ளடக்கிய அர்த்தங்களின் உருவமற்ற தொகுப்பை எதிரொலிக்கும் ஒரு நுண்ணிய மற்றும் பல்வகை ஒலிகளை உள்ளடக்கிய ஒரு காணல் அனுபவத்தை வழங்குகின்றன.

அகராதியின் உள்ளீடுகளில், “Y” என்ற எழுத்து இணங்குதலின் கருத்தைக் குறிப்பிடுவதில் *பரிசுடன்* எதிரொலிக்கிறது. அகராதியில் உள்ள “இணங்குதல்” என்பது காலனித்துவ வெற்றிக்கான பிராந்தியத்தின் ஒப்புதலை வகைப்படுத்தப் பயன்படுகிறது. அது நிலைமையைப் புரிந்துகொண்டதோடு தொடர்புபடுத்தப்படுகிறது. காண்பது என்பது இணங்குவதற்கு, காணப்படுகிற பொருள் மூலம் சுயத்தை மாற்றிக்கொள்ள அனுமதிப்பதற்கு: “படங்கள் உங்களுக்குள் நகர்வது போல, நீங்கள் படங்களின் உட்புறத்திற்கு நகர்கிறீர்கள்,” என்று அகராதியை விவரிப்பவர் கிசுகிசுக்கிறார். *பரிசு* என்னும் படைப்பில் பயன்படுத்தப்பட்டிருப்பதைபோல, ஒரு பரிசைப் பெறுவது அதன் கடப்பாடுகள் மற்றும் மாறத்தக்க விளைவுகளுக்கு இணங்குவதாகும்.